**சுருக்கம்**

பள்ளிக்கல்வி - ஆசிரியர் தேர்வு வாரியம் - மறுசீரமைப்பு வாரியக்குழு உறுப்பினர்கள் - நிர்வாக நலன் கருதி ஆசிரியர் தேர்வு வாரியக்குழு உறுப்பினர்களில் மாற்றம் செய்தல் - திருத்திய வாரியக்குழு உறுப்பினர்கள் - ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (ஆ.தே.வா) துறை**

**அரசாணை (நிலை) எண்.1** **நாள்: 08.01.2026**

**திருவள்ளுவர் ஆண்டு 2056**

**விசுவாவசு வருடம் மார்கழி 24**

**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை(நிலை)எண்.1, பள்ளிக் கல்வித்(ஆ.தே.வா) துறை, நாள் 03.01.2023.
2. அரசாணை(நிலை)எண்.97, பள்ளிக் கல்வித் (ஆ.தே.வா) துறை, நாள் 31.05.2023.
3. அரசாணை(நிலை)எண்.208, பள்ளிக் கல்வித்(ஆ.தே.வா)துறை, நாள் 17.11.2023.
4. ஆசிரியர் தேர்வு வாரிய தலைவரின் கடித ந.க.எண். 7630/அபிரிவு/இ2/2025, நாள் 12.08.2025 மற்றும் 24.09.2025.

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்கண்ட உறுப்பினர்களுடன் ஆசிரியர் தேர்வு வாரியக்குழு மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

| | |
|---|---|
| Chairman | An I.A.S., officer, Super time Scale of Pay (G.O. Ms. No. 1357, Education Department, dated 26.09.1990) |
| Member | School Education (in the Cadre of Director of School Education) |
| Member | School Education (in the Cadre of Director of School Education) |
| Ex-officio Member | Ex-officio Member (Secretary, Human Resource Management Department or nominee) |
| Ex-officio Member | Ex-officio Member (Commissioner of School Education) |
| Ex-officio Member | Ex-officio Member (Director of Technical Education) |
| Ex-officio Member | Ex-officio Member (Director of Collegiate Education) |
| The four Ex-officio Members in the Board is for ensuring neutrality and transparency in system. | |

2.மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏற்கனவே உள்ள உறுப்பினர்களுடன், நிதித்துறை செயலாளர் அல்லது அவரது பிரதிநிதியை ஆசிரியர் தேர்வு வாரிய நிர்வாகக் குழுவில் உறுப்பினராக நியமனம்செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலும், பள்ளிக் கல்வி ஆணையர் பணியிடத்தினை பள்ளிக் கல்வி இயக்குநர் பணியிடமாக மாற்றம் செய்து அரசால் ஆணை வழங்கப்பட்டதையடுத்து ஆசிரியர் தேர்வு வாரியக் குழு உறுப்பினர்களின் பணியிடத்தில் Commissioner of School Education என்ற பணியிடத்தினை Director of School Education என மாற்றம் செய்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் மேற்காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர்களைக் கொண்டு ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கைகள், உத்தேச கால அட்டவணைகள் மற்றும் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றும், இதேபோன்று ஆசிரியர் தேர்வு உத்தேச கால அட்டவணையின்படி உயர்கல்வித் துறையைச் சார்ந்த பணியிடங்களுக்கு அறிவிக்கை வெளியிடப்படும்போது ஆசிரியர் தேர்வு வாரியக்குழு உறுப்பினர்களுடன் தொழில்நுட்ப கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளதால் தொழில்நுட்ப கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர்களின் ஒப்புதல் வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், தொழில்நுட்ப கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் உயர்கல்வித் துறை அரசுச் செயலாளரின் கீழ் பணிபுரிவதால் அவர்களுக்குப் பதிலாக உயர்கல்வித் துறை அரசுச் செயலாளர் அவர்களை உறுப்பினராக நியமிக்கும் பட்சத்தில், உயர்கல்வித் துறைக்கு அரசுச் செயலாளர் ஆசிரியர் தேர்வு வாரியக்குழு உறுப்பினராவதுடன், உயர்கல்வித் துறையைச் சார்ந்த பணியிடங்கள் குறித்த விதிகள், தெளிவுரைகள், அரசாணைகள் மற்றும் இவை சார்ந்த Updation ஆகியவை குறித்து கோப்புகளில் தெரிவிக்க வாய்ப்புகள் உள்ளன என்றும், இதேபோன்று ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர்களில் பள்ளிக் கல்வித்துறை அரசுச் செயலாளர் உறுப்பினராக இருக்கும்பட்சத்தில், பள்ளிக்கல்வித் துறை அரசுச் செயலாளர் ஆசிரியர் தேர்வு வாரியக்குழு உறுப்பினராவதுடன், பள்ளிக் கல்வித் துறை சார்ந்த பணியிடங்கள் குறித்த விதிகள், தெளிவுரைகள், அரசாணைகள் மற்றும் இவை சார்ந்த Updation ஆகியவை குறித்து கோப்புகளில் தெரிவிக்க வாய்ப்புகள் உள்ளன என்றும், எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மறுசீரமைப்பு அரசாணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஆசிரியர் தேர்வு வாரியக்குழு உறுப்பினர்களில் கீழ்கண்டவாறு பதவிகளைக் கொண்ட திருத்திய வாரியக்குழு உறுப்பினர்களுக்கான அரசாணை வழங்குமாறு ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் அரசைக் கோரியுள்ளார்.

**திருத்திய ஆசிரியர் தேர்வு வாரியக்குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| Chairman | An I.A.S., officer, Super time Scale of Pay (G.O. Ms. No. 1357, Education Department, dated 26.09.1990) |
| Member (TRB) | School Education (in the Cadre of Director of School Education) |
| Member (TRB) | School Education (in the Cadre of Director of School Education) (Redesigned as Controller of Examination) |
| Ex-officio Member | Secretary to Finance Department or Nominee |
| Ex-officio Member | Ex-officio Member (Secretary, Human Resource Management Department or nominee) |
| Ex-officio Member | Ex-officio Member (Secretary to School Education Department) |
| Ex-officio Member | Ex-officio Member (Secretary to Higher Education Department – is any matters related to Higher Education Department) |
| Ex-officio Member | School Education (in the Cadre of Director of School Education) |
| Ex-officio Member | Elementary Education (in the Cadre of Director of School Education) |

6. மேற்காணும் ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து அதனை ஏற்று, ஆசிரியர் தேர்வு வாரியக் குழுவில் கீழ்கண்டவாறு வாரியக்குழு உறுப்பினர்களை நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| Chairman | An I.A.S., officer, Super time Scale of Pay (G.O. Ms. No. 1357, Education Department, dated 26.09.1990) |
| Member (TRB) | School Education (in the Cadre of Director of School Education) |
| Member (TRB) | School Education (in the Cadre of Director of School Education) (Redesigned as Controller of Examination) |
| Ex-officio Member | Secretary to Government, Finance Department or Nominee |
| Ex-officio Member | Secretary to Government, Human Resource Management Department or nominee |
| Ex-officio Member | Secretary to Government, School Education Department |

| | |
|---|---|
| Ex-officio Member | Secretary to Government, Higher Education Department – if any matters relate to Higher Education Department) |
| Ex-officio Member | Director of School Education |
| Ex-officio Member | Director of Elementary Education |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தர மோகன்.B**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006.
அரசு கூடுதல் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை-600 009.
அரசு கூடுதல் செயலாளர், நிதித்துறை, சென்னை- 600 009.
அரசு செயலாளர், மனித வள மேலாண்மைத் துறை,சென்னை- 600 009.
அரசு செயலாளர், உயர் கல்வித்துறை, சென்னை- 600 009.
மின் ஆளுமை ஆணையர், சென்னை – 600 002.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-600 006.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-600 006.
உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006.

நகல்

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 600 009.
நிதித் (CMPC/Edn-II) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**
08/01/26
8/1/26